www.padippakam.com

# கட்சியின் வேலைமுறையினை சீர்செய்க



தோழர் மாசேதுங்

வெளியீடு ;
முற்போக்கு இளைஞர் அணி, கோவை.

படிப்பகம்

www.padippakam.com

# நுழையும் முன்...

''உட்கட்சி விமர்சனம் என்பது, கட்சி ஸ்தாபனத்தை பலப்படுத்தி, அதன் போராட்ட ஆற்றலை பெருக்கும் ஒரு ஆயுதம் ஆகும்''

தோழர் மாவோ

எதிரிக்கு எதிரான, நமது போராட்டத்தில் நம் கையிலுள்ள ஒரே ஆயுதம் நமது ஸ்தாபனம் ஆகும் என தோழர் லெனின் கூறியுள்ளார். கட்சி ஸ்தாபனம், ஆயுதப்போராட்டம், ஐக்கிய முன்னனி ஆகிய இம்மூன்றுமே நம் வெற்றியின் ''மந்திரங்கள்'' என தோழர் மாவோ கூறியுள்ளார். மார்க்சிய ஆசான்களின், மேற்கூறிய கூற்றுக்கள், கட்சி ஸ்தாபனத்தின் அவசியம் பற்றி தெளிவாகவே விளக்குகின்றன.

கட்சி ஸ்தாபனத்தின் பலம் முக்கியமாக இருவிஷயங்களில் அடங்கியுள்ளது ஒன்று தன் ஊழியர்களை தத்துவ, அரசியல் படுத்துவது. இரண்டு, உட்கட்சி பிரச்னைகளை, பாட்டாளி வர்க்கத்தின் தத்துவ ஒளியில் தீர்த்துக்கொள்வது. (உட்கட்சி பிரச்னைகள் என்று இங்கு குறிப்பிடப்படுவது, கட்சி தோழர்களிடையே காணப்படும் அன்னிய வர்க்க நடைமுறைகள், பகைமையற்ற முரண்பாடுகள், மற்றும் நடுத்தரவர்க்க, குட்டி முதலாளிய பழக்கவழக்கங்களை பிரதிபலிப்பது முதலியவை ஆகும்) அவ்வகையில், உட்கட்சி பிரச்னைகளை தீர்ப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகளை இந்நூல் காட்டுகிறது. எண்ணற்ற இளம் தோழர்களின் வருகையினால், புதுப் பொலிவும், வலிவும் பெற்றிருக்கும் நம் இயக்கத்திற்கு, மேலும் அது தன் வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள, இந்நூல் உதவும் என உறுதியாக நம்புகிறோம்.

புரட்சி வாழ்த்துக்கள்!

தோழமையுடன்
முற்போக்கு இளைஞர் அணி
கோவை

படிப்பகம்

www.padippakam.com

# கட்சியின் வேலைமுறையினை சீர் செய்க

கட்சிப் பள்ளி இன்று தொடங்குகிறது. அது முழு வெற்றியடைய வாழ்த்துகிறேன். கட்சியின் சில வேலை முறைகளைப்பற்றி சொல்ல விரும்புகிறேன்.

ஏன் ஒரு புரட்சிகர கட்சி இருக்க வேண்டும்? உலகத்தில் மக்களை ஒடுக்கும் எதிரிகள் உள்ளனர். மக்கள் அவர்களின் ஒடுக்கு முறையை தூக்கியெறிய விரும்புகின்றனர். ஆகவே ஒரு புரட்சிகர கட்சி இருக்கவேண்டும் முதலாளித்துவ, ஏகாதிபத்திய சகாப்தத்தில் பொதுவுடமைக் கட்சியைப் போன்ற ஒரு புரட்சிகர கட்சி தேவைப் படுகிறது. இத்தகைய ஒரு கட்சி இல்லாமல் மக்கள் தங்கள் எதிரியின் ஒடுக்கு முறையை சாதாரணமாகதூக்கியெறிந்துவிடமுடியாது. நாம் பொதுவுடமைவாதிகள். நாம் எதிரிகளை தூக்கியெறிய மக்களை வழி நடத்த விரும்புகிறோம். ஆகவே நாம் நம் அணிகளை ஒழுங்காக வைத்திருக்க வேண்டும். நாம் முறையாக நடந்து கொள்ளவேண்டும். நமது படை தேர்ந்தெடுக்கப்பட்ட படையாக இருக்கவேண்டும். நமது படைக்கலன்கள் நல்ல படைக் கலன்களாக இருக்கவேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லையென்றால் நாம் எதிரிகளை வெல்ல முடியாது.

இன்று நம் கட்சியை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் என்ன? கட்சியின் பொதுவழி சரியாகவே உள்ளது. அதில் எந்த சிக்கல் களும் இல்லை. கட்சியின் வேலை பயனுள்ளதாகவே உள்ளது. எதிரிக்கு எதிரான, மிகக் கடுமையான போராட்டத்தில், மக்களை வழி நடத்திச் செல்லும் பல நூறு ஆயிரக்கணக்கான ஊழியர்களைக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டது நமது கட்சி. இது எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அனைவருக்கும் தெரிந்ததே. அப்படியானால் நம்மை எதிர்நோக்கும் பிரச்னைகளே இல்லையா? உண்டு என்று நான் கூறுகிறேன். ஒரு வகையில் அந்த பிரச்னை மிகவும் முக்கியமானது.

அந்த பிரச்னைதான் என்ன? நமது வேலை முறையில் சரியில்லாத, தவறான தன்மைகள் உண்டு என பலர் மனதில் ஐயப்பாடு உள்ளது.

வேறு வார்த்தையில் சொல்வதானால் கற்றுக்கொள்வதில் இன்னமும் தவறு இருக்கின்றது. நமது கட்சியின் உள், வெளி வேலை முறைகளில், நமது எழுத்து முறையில் சில தவறுகள் உள்ளன. நாம் கற்றுக்கொள்ளும் முறையில் அகநிலைநோய் உள்ளதெனக் கருதுகிறேன். நமது கட்சி உறவுகளில் தவறு என்பதன் அர்த்தம் குறுங்குழுவாதம் (Sectarianism) ஆகும். நமது எழுத்து முறையில் தவறு என்பதன் பொருள் பகட்டான எழுத்துநடை ❖ ஆகும். இவையெல்லாம் தவறே. ஆனால் இவை பெருந்தவறுகள் அல்ல. அகவய வாதம், குறுங்குழு வாதம், பகட்டான எழுத்து நடை ஆகிய இவை நம் வேலைகளில் ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆனாலும் அவை ஓரளவு தாக்கத்தை உண்டாக்குகிறது. எப்படியிருந்தபோதிலும் இக்குறைகள் நம் கட்சியில் இருக்கவே செய்கின்றன. இவை உட்புகும் வழிகளை நாம் அடைத்தே தீர வேண்டும். நமது கட்சி முழுதும் இந்தப் பணியில் ஈடுபடவேண்டும். அதேபோல் கட்சிப் பள்ளியும்தான். அகவயவாதம், வரட்டுவாதம் பகட்டான எழுத்துநடை ஆகிய இந்த மூன்று நோய்க்கூறுகள் அவைகளுக்குரிய வரலாற்று வேர்களை கொண்டுள்ளன. நமது கட்சி முழுவதையும் ஆதிக்கம் செலுத்தவில்லை என்ற போதிலும், அவை நம்மை தொடர்ந்து துன்புறுத்தி தொல்லைப்படுத்துகின்றன. ஆகவே நாம் இதனை எதிர்க்க இவற்றை முறையாக ஆராய்ந்து, அலசி வெளிப்படுத்த வேண்டும்

---

❖பகட்டு எழுத்து நடை: (Stereotyped Writing) 15-ம் நூற்றாண்டிலிருந்து 19-ம் நூற்றாண்டுமுடிய, சீனாவின் நிலப்பிரபுத்துவ அரசாட்சியில், ராஜாங்க தேர்வுகளில் பின்பற்றப்பட்ட தனி கட்டுரை வடிவம்தான் பகட்டு எழுத்து நடை அல்லது ''எட்டுக் கால் கட்டுரை'' (Eight-Legged Essay) என்பது. இக்கட்டுரை தனித்தனி தலைப்புகளாக எட்டு உட்பிரிவுகளைக் கொண்டது. ஆகவே ''எட்டுக்கால் கட்டுரை'' எனப்பெயர். இது உள்ளடக்க

படிப்பகம்

www.padippakam.com



நமது படிப்பை சீர்செய்ய அகவயவாதத்திற்கு எதிரான போராட்டம், கட்சி உறவுமுறையினை சீர்செய்ய வரட்டுவாதத்திற்கு எதிரான போராட்டம், கட்சியின் எழுத்து முறையை சீர்செய்ய, பகட்டான எழுத்து நடைக்கெதிரான போராட்டம் — இவைதான் நம் முன்னுள்ள பணிகள்.

எதிரிக்கு எதிரான நமது போராட்டத்தை வழிநடத்த நாம் இந்த சீர்செய்யும் பணியை மேற்கொள்ளவேண்டும். நமது படிப்பு முறையும் எழுத்து முறையும் கட்சியின் வேலை முறையில் அடங்கும். ஒரு முறை நமது கட்சியின் வேலை முறை சரியாக செப்பனிடப்பட்டால், நாடு முழுவதும் உள்ள மக்கள் நம்மிடமிருந்து கற்றுக்கொள்வர். கட்சிக்கு வெளியே உள்ள, இந்த மோசமான வேலை முறைகளை பின்பற்றுகிறவர்கள் அவர்கள் நேர்மையானவர்களும் நல்லவர்களாகவும் இருந்தால் தங்கள் குறைகளை சரிசெய்து கொள்வர். இந்த வகையில் நாடே நமது செல்வாக்குக்கு உட்படும். நமது அணிகள் நல்லமுறையில் இருக்கும்வரை, நமது படை தேர்ந்தெடுக்கப்பட்ட படையாக உள்ளவரை, நாம் சரியான முறையில் நடைபோடும்வரை, நமது படைக்கலன்கள் சரியான படைக்கலன்களாக உள்ளவரை, நமது எதிரியை-அவன் எவ்வளவு பலம் உள்ளவனாக இருந்தபோதிலும் - தூக்கி எறிய முடியும்.

இப்பொழுது அகவயவாதத்தைப் பற்றி பேசுவோம் அகவயவாதம் முறையில்லாத ஒரு படிப்புமுறை. இது மார்க்சிய லெனினியத்திற்கு பகைமையான ஒன்று. பொதுவுடமைக் கட்சியுடன் ஒத்துப்போக முடியாத ஒன்று. நாம் விரும்புவது மார்க்சிய, லெனினிய படிப்புமுறை. படிப்புமுறை என்று குறிப்பிடுவதன் மூலம் ( கட்சி ) பள்ளியில் உள்ள படிப்பு முறையை மட்டும் குறிப்பிடவில்லை. கட்சி முழுக்கவே குறிப்பிடுகிறோம். தலைமைக் குழு ஊழியர்கள், மற்ற ஊழியர்கள், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டு கட்சி அணி முழுதின், சிந்தனை

---

சிறப்பற்று, சொற்சிலம்பமும், வடிவத்தில் மட்டுமே கவனமும் கொண்டது. வெறும் ஆரவாரமான எழுத்து நடையை குறிக்க சீனாவில் இச்சொல்லை (பகட்டு எழுத்து நடை) பயன்படுத்துகிறார்கள். புரட்சிகர அணிகளிலே சில நபர்கள் உண்மையை ஆய்வதற்கு பதிலாக, புரட்சிகர சொற்களையும், வாக்கியங்களையும் கொண்டு எழுதும் குளறுபடியை குறிப்பதுதான் பகட்டு எழுத்து நடை.

www.padippakam.com



முறையைப் பற்றிய கேள்வியாகும். (இது) மார்க்சியம், லெனினியம் குறித்து நம் அணுகுமுறையைப் பற்றிய கேள்வியாகும். நமது கட்சித்தோழர்களின் வேலை முறையினை பற்றிய கேள்வியாகும். இந்தவகையில் இது அசாதாரணமான அவசியமான, முதன்மையான, முக்கியமான ஒன்று.

சில குழப்பமான கருத்துக்கள், மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளன. உதாரணத்திற்கு தத்துவம் என்றால் என்ன? தத்துவவாதி என்றால் என்ன? தத்துவத்தை, நடைமுறையுடன் இணைப்பது என்பதன் பொருள் என்ன, ஆகியவையே அவை.

நாம் முதலில் நமது கட்சியின் தத்துவார்த்த நிலை உயர்ந்துள்ளதா அல்லது தாழ்ந்துள்ளதா? என்ற கேள்வியை கேட்போம். சமீபகாலமாக, பெரும்பாலான மார்க்சிய, லெனினிய நூல்கள் மொழியாக்கம் செய்யபபட்டு, அதிகப்படியான மக்களால் படிக்கப் பட்டு வருகிறது. இது ஒரு நல்ல செயல். ஆகவே நாம் கட்சியின் தத்துவ அறிவு மிகவும் உயர்ந்துள்ளது என்று கூறமுடியுமா? முன்னைக்காட்டிலும் உயர்ந்துள்ளது என்பது உண்மை. ஆனால் நமது தத்துவத்தளமோ, செழிப்பு வாய்ந்த சீனப் புரட்சிகர நடைமுறையோடு இசைவு இல்லாமல் இருக்கின்றது. இந்த இரண்டையும் ஒப்பிடும்போது, தத்துவதளம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பொதுவாகச் சொன்னால் நமது தத்துவம், நமது புரட்சிகர நடைமுறையோடு, சரியாக நடைபோடமுடியவில்லை. இந்த இரண்டின் (தத்துவம், நடைமுறை-மொ-ர்) இணைவுமட்டுமே நம் இலட்சியத்தை வழிநடத்தும்.

நமது வளமான நடைமுறையை சரியான தத்துவநிலைக்கு உயர்த்தவில்லை. நாம் அனைத்து புரட்சிகர பிரச்னைகளையும் ஆய்வு செய்யவில்லை. முக்கியமானவைகளைக்கூட ஆய்வு செய்து தத்துவ நிலைக்கு உயர்த்தவில்லை. நம்மில் எத்தனைபேர் சீனாவின் பொருளாதார, அரசியல், இராணுவ, கலாச்சாரம் சம்பந்தப்பட்ட மதிப்புமிக்க கருத்துக்களை - கொச்சையானதாக, மேலெழுந்த வாரியாக அல்லாமல்-விரிவான, விஞ்ஞான முறையில் கோட்பாடு களாக உருவாக்கியுள்ளோம் என்பதை சிந்தித்துப்பாருங்கள். குறிப்பாக பொருளாதாரத்துறையில் இதைச் செய்துள்ளோமா? சீன முதலாளியம் அபினி யுத்தத்திலிருந்து ஒரு நூற்றாண்டு கால வளர்ச்சியுடையது.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் இது வரை விஞ்ஞான பூர்வமாக, சீனப் பொருளாதார வளர்ச்சியின் உண்மை நிலைகளுக்கு பொருந்தி வரக்கூடிய விஞ்ஞான பூர்வமான ஒரு கொள்கையைக் கூட நாம் உருவாக்க வில்லை. சீனப் பொருளாதார சிக்கல்கள்பற்றிய நம் படிப்பு உதாரணத்திற்கு தத்துவதளம் உயர்நிலையில் உள்ளதா? மதிப்பு மிக்க பொருளாதாரவாதிகள் நம் கட்சியில் உள்ளனரா? நாம் மிகப்பெரிய அளவிற்கு மார்க்சிய லெனினிய புத்தகங் களை கற்றுள்ளோம். ஆனால் அதற்காக நாம் தத்துவவாதிகள் எனக் கூறிக் கொள்ள முடியுமா? முடியாது. மார்க்ஸ், எங்கெல்ஸ் லெனின், ஸ்டாலின் ஆகியோரால், நடைமுறையை அடிப்படை யாகக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் மார்க்சிய, லெனினிய தத்துவம். அவர்களின் பொதுவான முடிவுகள் வரலாறு மற்றும் புரட்சிகர யதார்த்தத்திலிருந்து பெறப்பட்டவை. அவர்களின் எழுத்துக்களை வெறுமனே படித்து, ஆனால், அதன் தத்துவ ஒளியில் சீனாவின் வரலாறு, மற்றும் புரட்சி பற்றிய யதார்த்தங்களை படிப் பதை வளர்த்தாமல் அல்லது மிகக் கவனமான முறையில் சீனாவின் புரட்சிகர நடைமுறையை தத்துவ அளவு கொண்டு பார்க்கும் எந்த முயற்சியைப் பற்றியும் சிந்திக்காமல் இருந்தால் நாம் மார்க்சிய வாதிகள் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியாது. சீனப் பொதுவுடமைக் கட்சியின் உறுப்பினர்கள் என்ற முறையில் சீனாவின் சிக்கல்களுக்கு நாம் கண்களை மூடிக்கொண்டால் நம் தத்துவநிலை உண்மையில் மிகவும் வறியநிலையில் இருப்பதோடு மார்க்சிய எழுத்துக்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட முடிவு களையோ, அல்லது கொள்கைகளையோ மனப்பாடம் செய்வதாகத் தான் இருக்கும். ஒரு நபர் மார்க்சிய தத்துவத்தை நன்கு மனப் பாடம் செய்து, முதல் அத்தியாயத்திலிருந்து பத்தாவது அத்தியா யம் வரை ஒப்புவிப்பவராக இருந்து, ஆனால் அதைப் பிரயோகிக்க முடியாத நிலையில் இருந்தால் அவரை மார்க்சியவாதி என்று கருத முடியுமா? இல்லை அவரை அவ்வாறு கருத முடியாது. எந்தவகை யான தத்துவவாதியை நாம் விரும்புகிறோம். மார்க்சிய லெனினிய நிலைபாடு, கருத்து, மற்றும் முறையோடு பொருந்திவரக் கூடிய வகையில் வரலாறு மற்றும் புரட்சியின் போது எழுந்து வரும் நடை முறைப் பிரச்னைகளுக்கு முறையான விளக்கமும், சீனாவின் பொருளாதாரம், அரசியல், இராணுவம், கலாச்சாரம் மற்றும் ஏனைய பிரச்னைகளுக்கு விஞ்ஞான விளக்கத்தையும், தத்துவ விளக் கத்தையும், தரமுடிகிற தத்துவவாதிகளை நாம் விரும்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த வகையான தத்துவவாதியாக ஒருவர் இருக்க வேண்டுமானுல் மார்க்சிய, லெனினிய சாராம்சத்தை மார்க்சிய, லெனினிய நிலைபாடு, கருத்து, மற்றும் முறையை, காலனிய புரட்சி, சீனப் புரட்சி ஆகியன பற்றி லெனின், ஸ்டாலின் தத்துவங்களை செறித்துக் கொண்டவராகவும் அதனை சீனத்தின் சிக்கல்களுக்கு ஆழ்ந்த விஞ்ஞான அலசல்களுக்கு உட்படுத்தக் கூடியவராகவும் இந்த சிக்கலின் வளர்ச்சி விதிகளை கண்டறியக் கூடியவராகவும் இருக்க வேண்டும். இந்த வகையான தத்துவவாதிகள் தான் நமக்கு உண்மையில் அவசியம்.

மார்க்சிய லெனினிய நிலைப்பாடு கருத்து மற்றும் முறைகளை, சீனாவின் வரலாறு, பொருளாதாரம், அரசியல், இராணுவ நலன்கள் மற்றும் கலாச்சாரம் பற்றிய கவனமானப் படிப்புடன் எப்படிப் பொருத்துவது, ஒவ்வொரு பிரச்சனையையும் தெளிவான தடயங்களின் அடிப்படையில், ஸ்தூலமாக ஆராய்வது பின் தத்துவ முடிவுகளைக் கண்டறிவது என்று நமது ஊழியர்களைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை நமது மத்தியக்கமிட்டி இப்பொழுது நிறைவேற்றியுள்ளது.

கட்சிப் பள்ளியில் உள்ள நமது தோழர்கள் மார்க்சிய, லெனினிய தத்துவத்தை உயிரற்ற ஒரு வரட்டுச் சூத்திரமாகக் கருதக் கூடாது. மார்க்சிய தத்துவத்தில் புலமை பெற்று அதனை நடைமுறைப்படுத்துவது அவசியம். நடைமுறைப்படுத்துதல் என்ற முழுப்பயன்பாட்டிற்காகவே, அதில் புலமை பெறவேண்டும். ஒன்று, அல்லது இரண்டு நடைமுறை சிக்கல்களை தெளிவாக்குவதற்கு மார்க்சிய, லெனினிய கருத்துக்களை அமுல்படுத்தினுல் நீங்கள் சில வெற்றிகளுக்கு பெருமை கொள்ள முடியும். நிறைய பிரச்சனைகளை தெளிவாக்கினுல் விரிவாகவும் ஆழமாகவும் அதைச் செய்யும் போது உங்களது வெற்றியும் அதிகமானதாக இருக்கும். மார்க்சிய, லெனினிய படிப்பிற்குப்பின் சீனப்பிரச்சனைகளை, மாணவர்கள் எப்படிப்பார்க்கிருர்கள் — சிக்கல்களை தெளிவாக, அல்லது தெளிவற்று, முழுமையாக அல்லது அரைகுறையாக - என்பதை அடிப்படையாகக் கொண்டு, நல்ல அல்லது வறிய நிலை பற்றி மதிப்பிடுவதற்கான விதிமுறைகளை நமது கட்சிப் பள்ளி ஏற்படுத்த வேண்டும்.

அறிவு ஜீவிகளைப்பற்றிப் பேசுவோம். சீனு அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ நாடாக இருப்பதால், அதன் கலாச்சாரம் நல்ல வளர்ச்சி நிலையில் இல்லாமல் இருப்பதால் அறிவு ஜீவிகள்

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பாக மதிக்கப்படவேண்டும், அறிவு ஜீவிகள்பற்றிய சிக்கல்கள் மீது, இரண்டு வருடங்களுக்கு முன்னால் நமது மத்தியக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதன்படி நாம் பெரிய அளவிற்கு அறிவு ஜீவிகளை வென்றெடுக்க வேண்டும். அவர்கள் புரட்சியை ஏற்றுக்கொள்ளும் அளவைப் பொறுத்து, ஜப்பானிய எதிர்ப்பில் நம்முடன் பங்குகொள்ளும் அளவைப் பொறுத்து, அவர்களை நாம் வரவேற்க வேண்டும். புரட்சிகரமான அறிவு ஜீவிகள் இல்லாமல் புரட்சி வெற்றி பெற முடியாது. ஆகவே நாம் அறிவு ஜீவிகளை மதிப்பது எனபது முழுவதும் சரியானது. ஆனால் அறிவு ஜீவிகளில் அநேகர் மெத்தப்படித்தவர்களாக, மிகுந்த அறிவாளிகளாக தங்களை காட்டிக் கொள்வதை நாம் அனைவரும அறிவோம் இந்தப் போக்கு அவர்களின் முன்னேற்றத்திற்கு ஊறுவிளைவிக்கும். சில சமயங்களில் இவர்களைக் காட்டிலும் தொழிலாளிகளும், விவசாயிகளும் அதிகமாக அறிந்துள்ளனர்.' அறிவு ஜீவிகள் என்று சொல்லப்படும் பெரும்பாலோர் அறியாமையில் உள்ளனர் என்ற உண்மையினை அவர்கள் உணர வேண்டும். ''ஆ! நீங்கள் பிரச்னைகளை தலைகீழாகத் திருப்புகிறீர்கள், முட்டாள் தனமாக பேசுகிறீர்கள்'' என சிலர் சொல்லலாம். ஆனால் தோழர்களே உணர்ச்சி வசப்பட வேண்டாம். நான் சொல்வதில் சில அர்த்தங்கள் உள்ளன.

அறிவு என்பது என்ன? வர்க்க சமுதாயம் தோன்றியதிலிருந்து இருவித அறிவு வகைகளைத்தான் உலகம் கண்டுள்ளது. அவை உற்பத்திப் போராட்டம் வர்க்கப்போராட்டம் பற்றிய அறிவு ஆகும். இந்த இருவகை அறிவுகளும் ஒருங்கே திரட்டப்பட்டது தான் இயற்கை விஞ்ஞானமும், சமூக விஞ்ஞானமும் ஆகும். இயற்கை, சமூகம் பற்றிய அறிவின் பொதுமைப்படுத்தப்பட்ட தொகுப்புதான் தத்துவம். இது தவிர வேறுவகை அறிவு உண்டா? இல்லை. சமூக நடைமுறையிலிருந்து துண்டிக்கப்பட்ட பள்ளிகளில் வளர்ந்த சில மாணவர்களைப் பற்றி பார்ப்போம். இந்த வகையான பள்ளியில், ஆரம்ப வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரை செல்லும் ஒரு மாணவன், பட்டம் பெற்று, நிறைய படிப்பறிவு உள்ளவனாக கருதப்படுவான். ஆனால் அவன் கற்ற அனைத்துமே புத்தக அறிவு தான். இன்னும் அவன் நடைமுறை வேலைகளில் பங்கெடுக்கவில்லை. அல்லது அவன் கற்றுக் கொண்டதை வாழ்க்கையில் எந்த பகுதியிலும் பிரயோகிக்கவில்லை. இந்த வகையான ஒருவன் வளர்ச்சி பெற்ற முழு அறிவாளி எனக் கருதமுடியுமா? என் கருத்து இல்லை என்பதுதான். காரணம் அவன் அறிவு முழுமையடையாத ஒன்று.

படிப்பகம்

www.padippakam.com



சார்பு நிலையிலான முழு அறிவு என்பது என்ன? அனைத்து சார்பு நிலையிலான முழு அறிவும் இருகட்டங்களில் உருவாகிறது. முதல் நிலை புலனுணர்வு இரண்டாவது நிலை பகுத்தறிவு, இரண்டாம் நிலை முதல் நிலை ஓர் உயர்ந்த கட்டத்தை அடைவதுதான். மாணவனின் புத்தக அறிவு எந்த வகைப்பட்ட அறிவைச் சார்ந்தது. அவன் கற்றுக் கொண்டது அனைத்தும் உண்மை என்ற போதிலும், அவை அவன் சொந்த அனுபவத்திலிருந்து பெறப்படவில்லை. காரணம் அவன் முன்னோர்கள் உற்பத்தி, மற்றும் வர்க்கப்போராட்டத்தில் கிடைத்த அனுபவங்களை தொகுத்துத்தந்த தத்துவங்கள் தான் அவை. இந்த வகைப்பட்ட அறிவை மாணவர்கள் கற்றுக் கொள்வது முழு அவசியம் என்ற போதிலும், மற்றவர்களால் சோதித்தறியப்பட்ட, இன்னும் தங்களால் சோதித்தறியப்படாத ஒரு பக்கச் சார்புடையது, இந்த அறிவு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மிகுந்த முக்கியம் என்னவெனில் வாழ்க்கையிலும் நடைமுறையிலும்இதைசெயல் படுத்துவது நல்லது. ஆகவே நான் அறிவுறுத்துவது என்னவெனில் புத்தக அறிவு மட்டுமே கொண்டு, யதார்த்தத்தோடு எந்த உறவு இல்லாதவர்களும் சொற்ப நடைமுறை அனுபவத்தை கொண்டவர்களும் தங்கள் குறைகளை உணர்ந்து சிறிது அடக்கத்தை பெற வேண்டும்.

உண்மையான பொருளில் புத்தக அறிவு மட்டுமே கொண்டவர்கள், எவ்வாறு உண்மையான அறிவு ஜீவிகளாக மாறுவது? அவர்களை நடைமுறை வேலையில் பங்கெடுக்க வைத்து நடைமுறை வேலை செய்பவர்களாக மாற்றுவது, தத்துவ வேலையில் ஈடுபட்டுள்ளவர்களை, முக்கிய நடைமுறைச் சிக்கல்களை ஆய்வு செய்ய வைப்பது என்பதுதான் இதற்குள்ள ஒரே வழி. இந்த வழியில் தான் நமது இலட்சியம் கை கூட முடியும்.

என் பேச்சு சில்ரை கோபமடையச் செய்யும். அவர்கள் சொல்லலாம், 'உங்களுடைய கருத்துப்படி மார்க்ஸைக் கூட அறிவு ஜீவியாக கருத முடியாது', நான் சொல்கிறேன் அவர்கள் தவறிழைக்கிறார்கள். மார்க்ஸ் புரட்சிகர இயக்கத்தின் நடைமுறையில் பங்கெடுத்தார், அதன் மூலம் புரட்சிகர தத்துவத்தையும் உருவாக்கினார். பண்டம் என்ற முதலாளித்துவ எளிய அடிப்படையிலிருந்துஅவர் அதன் முழு பொருளாதார அமைப்பை முற்றாக ஆய்வு செய்தார். இலட்சக்கணக்கான மக்கள் நாள்தோறும் பண்டங்களை பார்க்கிறார்கள். அதனை பயன்படுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் அதில் எந்த கவனமும் செலுத்துவதில்லை. மார்க்ஸ் ஒருவர்

படிப்பகம்

www.padippakam.com



மட்டுமே பண்டங்களை பற்றி விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தார் அதன் உண்மையான வளர்ச்சிபற்றி, மிகப் பெரிய ஆய்வினை, முற்றான விஞ்ஞான தத்துவத்தை உருவாக்கினார். அவர் இயற்கை, வரலாறு, பாட்டாளி வர்க்கப்புரட்சி பற்றிய தத்துவம் ஆகியயனபற்றி ஆராய்ந்தார், இந்த வகையில் அவர் முழுவளர்ச்சி அடைந்த அறிவுஜீவியாக உருவானார். மனித அறிவின் உயர்ந்த கட்டத்தை பிரதிநிதிப்படுத்தினார். புத்தக அறிவு மட்டுமே கொண்டவர்களிடமிருந்து இவர் அடிப்படையிலே மாறுபட்டிருந்தார். மார்க்ஸ் விளக்கமரன ஆய்வினை மேற்கொண்டார். நடைமுறை போராட்ட வளர்ச்சிப் போக்கில் அதனை படித்து பின் பொதுக் கருத்தை அமைத்தார். பிறகு அந்த முடிவுகளை நடைமுறைப் போராட்டத்தில் உரசிப்பார்த்து சோதித்துக் கொண்டார். இதைத்தான் நாம் தத்துவ வேலை என்கிறோம். இவ்வகையில் வேலைகளை எப்படி செய்வது என்பதை அறிந்த அதிகமான தோழர்கள் நமது கட்சிக்கு தேவை. இவ்வகையான தத்துவ வேலைகளைக் கற்றுள்ள அதிகமான தோழர்கள் நமது கட்சியில் உள்ளனர். அவர்களில் பெருப்பாலானோர் முன்னேறக்கூடிய அறிவாளிகள். நாம் அவர்களை மதிக்கவேண்டும். ஆனால் அவர்கள் சரியான கொள்கைகளை கைக்கொள்ள வேண்டும். கடந்தகாலத் தவறினை திரும்பவும் செய்யக்கூடாது. அவர்கள் வரட்டுவாதத்தை மறுத்தொதுக்கவேண்டும். புத்தகங்களிலுள்ள முன் தயாரிக்கப்பட்ட 'மேற்கோள்'களுக்குள் சிக்குண்டவராக தன்னை குறுக்கிக் கொள்ளக்கூடாது.

உலகில் ஒரே ஒரு உண்மையான தத்துவம்தான் உள்ளது. அது புறவய யதார்த்தங்களிலிருந்து பெறப்பட்டு, புறவய யதார்த்தங்களால் சரிபார்க்கப் படுவதாகும். இதைத்தவிர மற்றவையெல்லாம் நம் கருத்தில் தத்துவம் என்று சொல்லத்தக்கதல்ல. தத்துவம் நடைமுறையோடு சம்பந்தப்படாதபோது அது இலக்கற்று போய் விடும் என ஸ்டாலின் கூறினார். இலக்கற்ற தத்துவம் பயனில்லாதது ,பிழையானது. அதனை நாம் ஒதுக்கிவிடவேண்டும். இலக்கற்ற தத்துவங்களை உருவாக்குபவர்களை நாம் இகழ்ச்சியோடு சுட்டிக் காட்ட வேண்டும். புறவய யதார்த்தத்தில் தோன்றி, அதனால் சோதித்தறியப்பட்ட மார்க்சிய லெனினியம் மிகச் சரியான, விஞ்ஞான ரீதியான புரட்சிகர உண்மையாகும். ஆனால் மார்க்சிய லெனின்யத்தைப் படிக்கும் மிகப் பலர், அதனை உயிரற்ற வரட்டு சூத்திரமாக எடுத்துக் கொள்வதன் மூலம், அதன் வளர்ச்சிக்கு

படிப்பகம்

www.padippakam.com



முட்டுக்கட்டை ஏற்படுத்துகிறார்கள். இதனால் தனக்கும், அதே வேளையில் மற்ற தோழர்களுக்கும் ஊறு விளைவிக்கிறார்கள்.

மறுபக்கம் நடைமுறை வேலையில் பங்கெடுக்கும் தோழர்கள் தங்கள் அனுபவங்களை தவறான பாதையில் செலுத்தினால் வருந்த வேண்டி நேரிடும். இவர்கள் அனுபவத்தில் வளமானவர்கள். இது மதிப்புமிக்க ஒன்றுதான். ஆனால் தங்கள் அனுபவத்தோடு திருப்தி யடைந்துவிட்டால் அது ஆபத்தான ஒன்று. அவர்கள் தங்கள் அனுபவம், புலனறிவானது, ஒருபக்கமானது என்பதை உணர வேண்டும். இந்த வகையில் அவர்கள் முழுமையான பகுத்தறிவில் குறைபாடுள்ளவர்கள். வேறு வார்த்தையில் சொல்வதானால் அவர்கள் தத்துவக் குறைபாடுடையவர்கள். அவர்கள் அறிவு முழு மையற்றது. ஒப்பீட்டளவில் முழுமையான அறிவில்லாமல் நல்ல முறையில் புரட்சிகர வேலை செய்வதென்பது முடியாத ஒன்று. ஆகவே முழுமையற்ற அறிவில் இருவகையுண்டு. ஒன்று புத்தகங் களில் காணப்படும் முன்தயாரிக்கப்பட்ட அறிவு. மற்றது பெரும்பா லும் புலனுணர்வானபகுதி அறிவு. இரண்டுமே ஒருதலைப்பட்சமானது இந்த இரண்டின் இணைவில்தான், பலமான ஒப்பீட்டளவில் முழுமை யான அறிவைப் பெற முடியும். எப்படியிருந்த போதிலும் தத்து வத்தை படிப்பதற்கு தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியிலிருந்து வந்த நமது தோழர்கள் முதலில் அடிப்படைக் கல்வியைப் பெற வேண்டும். இதில்லாமல் அவர்கள் மார்க்சியம், லெனினியம் கற்றுக்கொள்ள முடியாது. இதைப் பெறுவதன் மூலம் அவர்கள் எந்த நேரத்திலும் மார்க்சியம், லெனினியம் கற்றுக்கொள்ள முடி யும். எனது குழந்தைப் பருவத்தில் மார்க்சிய லெனினிய பள்ளியில் கலந்து கொள்ளவில்லை. ஆசிரியர் சொன்னார் ''கற்றுக் கொள்வ தும், கற்றதை இடையறாது நினைவு கூர்வதும் எவ்வளவு இனிமை யான ஒன்று.'' இம்மாதிரிதான் எனக்கும் கற்றுக் கொடுக்கப்பட் டது. இந்த படிப்புமுறை பழமையானதாக இருந்தபோதிலும் இது எனக்கு சில நல்லது செய்துள்ளது. ஏனெனில் இதிலிருந்து தான் படிப்பதற்கு கற்றுக் கொண்டேன். தற்போது நாம் கன்பூசிய இலக்கியம் படிக்க இயலாது. ஆனால் நவீன சீனாவின் வரலாறு புவியியல், அடிப்படை இயற்கை விஞ்ஞானம் போன்ற, புதிய பாடங்கள் ஒருமுறை படித்தது எல்லாவகைக்கும் உதவுகிறது. நமது கட்சியின் மத்தியக் கமிட்டி வலியுறுத்திக் கேட்டுக்கொள்வது இதுதான்: தொழிலாளர்கள் விவசாயிகள் மத்தியிலிருந்து வந்தவர்

படிப்பகம்

www.padippakam.com



கள் அடிப்படைக் கல்வியைப் பெறவேண்டும். ஏனெனில் அதிலிருந்து தான் அவர்கள் ஏதாவது ஒருதுறை அறிவை- அரசியல், இராணுவ விஞ்ஞானம் அல்லது பொருளாதாரம்-தொடரமுடியும். மற்றபடி வளமான அனுபவங்கள் இருந்தும் தத்துவத்தைக் கற்றுக் கொள்ள இயலாமல் போய்விடும்.

இதிலிருந்து பெறுவது என்னவெனில் அகநிலைவாதத்தை எதிர்கொள்ள இந்த இருவகையான பிரிவினரை அவர்கள் எதில் குறைவாக உள்ளனரோ, அதை நோக்கி வளர்த்தவும், மற்ற பிரிவினரோடு ஒன்றிணையவும் செய்ய வேண்டும். புத்தகப்படிப்பில் உள்ளவர்கள் நடைமுறை திசை நோக்கி வளர வேண்டும். இவ்வகையில் மட்டும்தான் அவர்கள் புத்தகத்தோடு திருப்தியடைவது நிறுத்தப்பட்டு, வரட்டுவாத தவறுகள் இழைப்பது தவிர்க்கப்படும். நடைமுறை வேலையில் அனுபவம் வாய்ந்தவர்கள் தத்துவம் படிக்க வேண்டும். தீவிரமாகப் படிக்க வேண்டும். அதன் மூலம்தான் அவர்கள், தங்கள் அனுபவத்தை ஒழுங்கமைக்கவும், தொகுக்கவும் தத்துவ நிலைக்கு அதை உயர்த்தவும் முடியும். இவ்வகையில்தான் சர்வ வியாபக உண்மைக்காக தங்கள் பகுதி அனுபவத்தை தவருக பயன்படுத்தமாட்டார்கள். அனுபவவாத தவறு இழைக்கமாட்டார்கள். வரட்டுவாதமும், அனுபவவாதமும், அகவயவாதம் போன்றதே எதிரெதிரான நிலையிலிருந்து மையம் கொள்வதுதான். ஆகவே இரண்டு வகையான அகவயவாதம்-வரட்டுவாதம், அனுபவவாதம்-நமது கட்சியிலுள்ளது. ஒவ்வொன்றும் பகுதியைத்தான் பார்க்கிறது, முழுமையை அல்ல. மக்கள் விழிப்போடு வைக்கப்படாமலிருந்தால், பகுதி என்பது ஒருகுறை என்பதை அறியாமலிருந்தால், அதிலிருந்து மீள்வதற்கு முயற்சிக்காமலிருந்தால் திசை மாறுதலுக்கு ஆட்படுவார்கள்.

எப்படியிருந்த போதிலும், இந்த இருவித அகவயவாதத்தில் வரட்டு வாதம் என்பது, நமது கட்சியில் இன்னும் பெரிய அபாயமாக உள்ளது. வரட்டுவாதிகள் தங்களுடைய அரை வேக்காட்டுத் தனத்திற்கு சுலபமாக, மார்க்சிய வேடமிட்டுக் கொள்வதன் மூலம் தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியிலிருந்து வந்த ஊழியர்களை தன்வசப்படுத்தி தங்கள் வேலைக்குப் பயன்படுத்திக் கொள்வார்கள் வாய்ப்பந்தல் அடித்து அப்பாவி இளைஞர்களை பொறியில் சிக்க வைத்து விடுவார்கள். நாம் வரட்டுவாதத்தை வெற்றிகொண்டால் புத்தகஅறிவுள்ள தோழர்கள், அனுபவ அறிவு

படிப்பகம்

www.padippakam.com



கொண்டவர்களோடு இணைந்து கொண்டு நடைமுறைப் பொருள்களை படிக்க ஆரம்பித்து விடுவர். பிறகு அதிக ஊழியர்கள், தத்துவத்தை நடைமுறையோடு இணைப்பவர்கள், அதே சமயத்தில் உண்மையான தத்துவவாதிகள் உருவாவார்கள். நாம் வரட்டுவாதத்தை வெற்றி கொண்டால் அனுபவி அறிவைக் கொண்டுள்ளவர்கள் தங்கள் அனுபவத்தை தத்துவ நிலைக்கு உயர்த்த உதவும் நல்ல ஆசிரியர்கள் கிடைப்பார்கள். ஆகவே அவர்கள் அனுபவவாத தவற்றை தவிர்ப்பார்கள்.

தத்துவம் மற்றும் அறிவு ஜீவிகள் குறித்த குழப்பம் தவிர, தத்துவத்தை நடைமுறையோடு இணைப்பது குறித்தும், பெரும் பாலான தோழர்களிடையே குழப்பம் உள்ளது. அன்ருடம் தத்துவத்தை நடைமுறையோடு இணைப்பது குறித்து உதட்டளவில் பேசி, செயலில் பிரிவினையையே புரிந்து கொள்கிருர்கள். ஏனெனில் இணைப்பது குறித்து எந்த முயற்சியும் எடுப்பதில்லை. மார்க்சிய, லெனினிய தத்துவத்தை எப்படி சீனப்புரட்சி நடைமுறையோடு இணைப்பது, வழக்கு மொழியில் சொல்வதாளுல் 'இலக்கை நோக்கி அம்பை எய்தவன் மூலம்', இலக்கு நோக்கி அம்பு என்பது போல, சீனப்புரட்சியை நோக்கி மார்க்சிய, லெனினியம். சிலதோழர்கள் இலக்கற்று எய்கிருர்கள். மனம்போன வாறு எய்கிருர்கள். இவ்வகையானவர்கள் புரட்சிக்கு ஊறு விளைவிப்பவர்கள். மற்றவர்கள் அம்பை விருப்பத்தோடு தடவி 'என்ன அருமையான அம்பு!' என்று வியக்கிருர்கள். ஆனால் எய்துவதற்கு எத்தனிப்பதே இல்லை. இவர்கள் புதுமை குறித்த கலை வல்லவர்கள் தான். உண்மையில் புரட்சிக்கு ஒன்றுமே செய்வதில்லை. மார்க்சிய, லெனினிய அம்பு, சீனப்புரட்சி என்ற இலக்கை நோக்கி எறிய வேண்டும். இந்த விஷயம் தெளிவாகாமல் நமது கட்சியின் தத்துவ அறிவை உயர்த்த முடியாது.. சீனப்புரட்சி வெற்றியடைய முடியாது.

நாம் மார்க்சிய, லெனினியத்தைப் படிப்பது பகட்டுக்காக அல்ல. ஆனால் முழுக்க முழுக்க தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்தை, வெற்றி நோக்கி இட்டுச்செல்லும் விஞ்ஞானம் என்பதால் தான். ஒரு முறை, கற்றுக்கொண்டால், சுலபமாக அனைத்து நோய்களையும் தீர்த்துவிடும் காயகல்பமாக மார்க்சிய மேற்கோள்களை கருதும் நபர்கள் கொஞ்சமல்ல. அவர்கள் குழந்தைத்தனமான அறியாமையை வெளிப்படுத்து

www.padippakam.com



கிறார்கள். அவர்களுக்கு நாம் புரியவைக்க வேண்டும். முக்கியமாக இந்தவகையான அறியாமையிலுள்ள நபர்கள்தான், மார்க்சிய, லெனினியத்தை ஒரு வரட்டு வாதமாக கையாளுகிறார்கள். அவர்களுக்கு நாம் வெளிப்படையாக சொல்ல வேண்டும் 'உங்கள் வரட்டுவாதம் பயனற்றது.' மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் திரும்பத் திரும்பச் சொல்லி யிருக்கின்றனர் நமது தத்துவம் வரட்டு வாதமல்ல, செயலுக் கான வழிகாட்டி. ஆனால் இந்தவகையான மனிதர்கள் மதிப்பு வாய்ந்த, உண்மையில் மிகவும் முக்கியமான ஒன்றான இந்த அறிவிப்பை மறந்து விடுகிறார்கள். மார்க்சிய. லெனினிய நிலை யினை, சிந்தனையை, முறையை, லெனின், ஸ்டாலின் பாடங்களை சீனப்புரட்சி குறித்து, நல்லமுறையில் கையாள்வதன் மூலம்தான் சீனப்பொதுவுடமைவாதிகள் தத்துவத்தை நடைமுறையோடு இணைத்துள்ளனர் எனக்கருத முடியும். மேலும் சீனவரலாறு, புரட்சிகுறித்த யதார்த்தங்களின் மீது தீவிர ஆய்வினைச் செய்வதன் மூலம் பல துறைகளில் சீனாவின் தேவைகளைச் சந்திக்கும் ஒரு ஆக்க பூர்வமான தத்துவ வேலையைச் செய்ய முடியும். பெயரளவில் தத்துவத்தை நடைமுறையோடு இணைப்பது என்று பேசுவதால் மட்டுமே— நூறு ஆண்டுகளுக்கு பேசிக்கொண்டிருந்த போதிலும்— எந்த பயனும் விளையாது. அகவயவாதத்தையும், ஒருதலைப் போக்கையும் வேரறுக்க வேண்டும். அகவயவாதத்தை எதிர்ப் பதற்கு கட்சி முழுவதிலும் உள்ள படிப்பு முறையை சீர் செய்வது பற்றி இன்று இதுபோதும்.

குறுங்குழுவாத பிரச்னை குறித்து இப்போது பேசுவோம். இருபது வருடங்களாக உருக்காக வார்க்கப்பட்ட நம் கட்சியில் குறுங்குழுவாதம் ஆதிக்கம் செலுத்துவது என்பது இனிமேல் இல்லை. கட்சியின் உள், மற்றும் வெளி உறவுகளில் குறுங்குழுவாதத்தின் மிச்ச சொச்சங்கள் இன்றும் காணக்கிடக்கின்றன. கட்சியின் உள் நிலவும் குறுங்குழுவாத போக்கானது கட்சி ஊழியர்களை விலக்கி வைத்து ஒற்றுமைக்கும், இணைவுக்கும் தடையாக உள்ளது. கட்சி யின் வெளி உறவில் நிலவும் குறுங்குழுவாத போக்கானது, கட்சியை மக்களிடமிருந்து பிரித்து வெகுமக்களை இணைக்கும் கட்சியின் வேலைக்கு தடையாக உள்ளது. இதனை வேரறுப்பதன் மூலம்தான், நமது கட்சி ஊழியர்களிடையே இணைப்பை ஏற்படுத்துவது, மக்களை ஒன்றுபடுத்துவது என்ற தனது பணியில் தடையற்று முன்னேற் றத்தை ஏற்படுத்த முடியும். உட்கட்சியில் நிலவும் குறுங்குழுவாத

படிப்பகம்

www.padippakam.com



மிச்ச சொச்சங்கள் என்ன? பின்வருவன அவைகளில் முக்கிய மானவை.

முதலில் ''சுதந்திர'' நிலையை வலியுறுத்துவது. சில தோழர் கள் முழுமையைப் புறக்கணித்து, பகுதி நலனை கவனத்தில் எடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் எப்போதுமே தங்கள் பொறுப்பில் உள்ள வேலைகளுக்கு தேவையற்ற முக்கியத்துவம் கொடுக்கின் றனர். தனது சொந்த பகுதி நலன்களுக்கு, முழு நலன்களையும் அடிபணிய வைக்கின்றனர். அவர்கள் கட்சியின் ஜனநாயக மத்தி யத்துவத்தை புரிந்துகொள்ளவில்லை. பொதுவுடமைக் கட்சிக்கு ஜனநாயகம் மட்டுமல்ல, அதைக் காட்டிலும் மத்தியத்துவம் அவசியம் என்பதை அறிந்துகொள்ளவில்லை. சிறுபான்மை யினர், பெருபான்மையினருக்கும், கீழ்மட்டம் மேல்மட்டத்திற்கும் பகுதி முழுமைக்கும், அனைத்து ஊழியர்கள் மத்தியக் கமிட்டிக்கும் கட்டுப்பட்டு நடக்கும் ஜனநாயக மத்தியத்துவ அமைப்பை மறந்து விட்டார்கள். காங்.-குவாட்டா மத்தியக் கமிட்டியில் தனது ''சுதந்திர'' நிலையை வலியுறுத்துவதன் மூலம் கட்சிக்குத் தனது துரோகத்தனத்தை உறுதிப்படுத்திக்கொண்டு கோமிங்டாங் ஏஜண் டாக மாறினர். இப்போது நாம் விவாதித்து வரும் குறுங் குழுவாதம் அபாயகரமான ஒன்றாக இல்லாத போதும், இதற்கு எதிராக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒற்றுமையின்மையின் எல்லா வெளிப்பாடுகளையும் தூக்கியெறிய வேண்டும். முழுமையின் நலன்களை கணக்கிலெடுத்துக்கொள்ள கட்சித் தோழர்களை ஊக்கப் படுத்தவேண்டும்.

ஒவ்வொரு கட்சி ஊழியரும், ஒவ்வொரு வேலைப் பிரிவும், ஒவ்வொரு அறிவிப்பும், ஒவ்வொரு நடவடிக்கையும் கட்சியின் முழு நலன் என்ற நோக்கில் இருந்து தொடரவேண்டும். இந்த கொள் கையை மீறுவது என்பது முற்றிலும் அனுமதிக்க முடியாத ஒன்று.

இந்த வகையான ''சுதந்திர'' நிலையை வலியுறுத்துபவர்கள் ''தனக்கு முதலிடம்'' என்ற கொள்கையில் பற்று கொண்டு கட்சி, தனிநபர் உறவுகுறித்த பிரச்னையில் பொதுவாக தவறிழைக் கிறார்கள். பேச்சளவில் கட்சிக்கு மரியாதை குறித்து பேசியபோதி லும், நடைமுறையில் தன்னை முதன்மைபடுத்தி, கட்சியை இரண் டாம் நிலைக்கு தள்ளுகிறார்கள். தோழர் லியு-சோ-சி ஒரு சமயம் சொன்னதைப் போல, சிலர் கட்சியின் முழுநலனைக் காட்டிலும் தங்களின் சொந்த நலனை அடைவதில் கைதேர்ந்தவர்களாக

படிப்பகம்

www.padippakam.com



உள்ளனர். ''என்னுடையது எனக்குத்தான். உன்னுடையதும் எனக்குத்தான்'' இவர்களின் நோக்கம் என்ன? இவர்கள் புகழ், நல்ல அந்தஸ்து, பிரபல்யம் என்ற நோக்கத்திற்காக உள்ளனர். ஒரு வேலைப்பிரிவின் பொறுப்பு அவர்களுக்கு வைக்கப்படும் போதெல்லாம் தங்கள் ''சுதந்திர'' நிலைகுறித்து வலியுறுத்து கிறார்கள். இந்த நோக்கத்தில் சில நபர்களை உள்ளுக்குள் இழுக்கிறார்கள். மற்றவர்களை வெளியில் தள்ளுகிறார்கள். தற் பெருமை, முகஸ்துதி செய்து கவர்வது போன்றவற்றை தோழர் களிடையே செய்கிறார்கள். இதன் மூலம் முதலாளித்துவ கட்சி யின் கொச்சை நடைமுறைகளை பொதுவுடைமைக் கட்சிக்குள் இறக்குமதி செய்கிறார்கள். அவர்களின் பொறுப்பற்ற தன்மை தான் அவர்களை வருந்தும் நிலைக்கு உள்ளாக்குகிறது. நாம் நேர்மையோடு செயல்பட வேண்டும் என நம்புகிறேன். ஏனெனில் நேர்மையான செயல் இல்லாமல் உலகின் எந்த ஒன்றுடனும் இணைவது என்பது முழுக்க, முழுக்க, சாத்தியமில்லை.

நேர்மையான நபர்கள் யார்? மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் நேர்மையானவர்கள். விஞ்ஞானிகள் நேர் மையானவர்கள். நேர்மையற்ற நபர்கள் யார்? ட்ராஸ்கி, புகாரின், சென்-டீயு-குக, சாங்-கோ-டா இவர்கள் முழுக்க, முழுக்க நேர்மை யற்ற நபர்கள். குழு அல்லது தனிநபர் அடிப்படையில் ''சுதந்திர'' நிலையை வலியுறுத்துபவர்கள் கூட நேர்மையற்ற நபர்கள் தான். தந்திரமான நபர்களும் தங்களை மதிப்பு மிக்கவர்களாக, புத்திசாலி களாக அலங்காரப்படுத்திக் கொண்டு, ஆனால் தங்கள் வேலை களில் விஞ்ஞான அணுகுமுறை கொண்டிராத அனைத்து நபர்களும், உண்மையில் ரொம்பவும் அயோக்கியர்கள். அவர்கள் எந்த நன்மைக்கும் உதவுவதில்லை. நமது கட்சிப் பள்ளியில் உள்ள மாணவர்கள் இந்தப் பிரச்னையில் கவனம் செலுத்த வேண்டும். நாம் ஒரு மத்தியப்படுத்தப்பட்ட ஒற்றுமையான கட்சியைக் கட்ட வேண்டும். தனிநபர் வாதத்தையும், சந்தர்ப்பவாதத்தையும் எதிர்ப்பதன் மூலம் நமது கட்சி முழுதையும் ஒரு பொது இலட்சி யத்திற்காக நடைபோட, போரிட தயார் படுத்த வேண்டும்.

வெளியிலுள்ள கட்சி ஊழியர்களும் ஸ்தலத்திலுள்ள கட்சி ஊழி யர்களும் இணைந்து குறுங்குழுவாதப் போக்குகளை எதிர்க்க வேண் டும். உள்ளூர் ஊழியர்கள், வெளியூர் ஊழியர்கள் உறவு குறித்து தீவிர கவனம் செலுத்தல் வேண்டும். ஏனெனில், எட்டாவது வழிப்

படிப்பகம்

www.padippakam.com



படை அல்லது புதிய முன்னணிப் படை வந்த பின்புதான் பெரும்பாலான ஜப்பானிய எதிர்ப்பு தளங்கள் நிறுவப்பட்டன. வெளிப்பகுதி ஊழியர்கள் வருகைக்குப் பின்தான் ஸ்தல வேலைகள் வளர்ந்தது... இந்த நிலையில் இந்த இருவகையான ஊழியர்களின் இணைப்பிலும், பெருமளவிற்கான உள்ளூர் ஊழியர்களை வளர்த்தி உயர்த்துவதன் மூலமும், நமது தளங்கள் பலப்படுவதும் நமது கட்சி வேர் கொள்வதும் அடங்கியுள்ளது. இதைத் தவிர வேறு சாத்தியமில்லை இருவகை ஊழியர்களிடையே பலமான, மற்றும் பலவீன அம்சங்கள் உண்டு. எந்த ஒரு முன்னேற்றத்திற்கும் மற்றவர்களின் பலமான அம்சங்களை பரஸ்பரம் கற்றுக் கொள்வதன் மூலம் தங்களின் சொந்தபலவீனங்களை களைய வேண்டும். மக்களுக்கிடையில் உள்ள பிணைப்பில், உள்ளூர் நிலைமைகள் பற்றிய அறிவில் வெளிப்பகுதி ஊழியர்கள், உள்ளூர் ஊழியர்கள் அளவிற்கு இருக்க முடியாது உதாரணத்திற்கு என்னை எடுத்துக் கொள்ளுங்கள். வடக்கு சென்சியில் நான் ஐந்தாறு வருடங்கள் இருந்த போதிலும் ஸ்தல பிரச்சனைகள் பற்றிய புரிதலில், மக்களோடு உள்ள தொடர்பில் உள்ளூர் ஊழியர்களைக் காட்டிலும் நான் பின்தங்கிய நிலையில் உள்ளேன். சான்சி, கொபே, சாங்-டெங். இன்னும் மற்ற பிரதேசங்களிலுள்ள ஜப்பானிய எதிர்ப்பு தளங்களுக்குச் செல்லும் ஊழியர்கள் இதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் ஒரே தளப்பிரதேத்திற்குள்ளாக, சில மாவட்டங்கள் வளர்ச்சியடைந்தும், சில பின்னடைந்தும் இருப்பதால், உள்ளூர் மற்றும் வெளிப்பகுதி ஊழியர்களிடையே வேறுபாடுகள் இருக்கும். வளர்ச்சியடைந்த மாவட்டங்களிலிருந்து பின்தங்கிய மாவட்டத்திற்கு வருகை தரும் ஊழியர்கள், அந்தப் பகுதியை பொறுத்தளவில் வெளியூர் ஊழியர்கள் தான். அவர்களும் கூட உள்ளூர் ஊழியர்களை வளர்த்தவும் அவர்களுக்கு உதவவும் கவனம் செலுத்த வேண்டும். பொதுவாகச் சொல்லப்போனால் வெளியூர் ஊழியர்கள் பொறுப்பில் உள்ளபோது, உள்ளூர் ஊழியர்களுடன் ஏற்படும் ஒரு மோசமான உறவுக்கு அவர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும். சில இடங்களில் இந்த பிரச்சனை மீது போதிய கவனம் செலுத்தப்படவில்லை. சிலநபர்கள் உள்ளூர் ஊழியர்களை தாழ்வாகப் பார்த்து, 'இவர்களுக்கு என்னதெரியும், பட்டிகாட்டான்' என்று ஏளனம் செய்கிறார்கள். அந்த தோழர்கள் உள்ளூர் ஊழியர்களின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதில் முழுத் தவறு செய்கிறார்கள். அவர்கள் உள்ளூர் ஊழியர்களின் பலமான

படிப்பகம்

www.padippakam.com



அம்சங்களையோ தங்களின் பலவீனங்களையோ அறிந்து கொள்ளாது, தவறான குறுங்குழுவாத நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். எல்லா வெளியூர் ஊழியர்களும், உள்ளூர் ஊழியர்களை மதிக்க வேண்டும், அவர்களுக்கு இடையறாது உதவவேண்டும் அவர்களை கேலி செய்யவோ, தாக்கவோ அனுமதிக்கக் கூடாது. அதே வேளையில் உள்ளூர் ஊழியர்கள் தங்கள் பங்குக்கு வெளியூர் ஊழியர்களிடமிருந்து நல்ல அம்சங்களைக் கற்றுக்கொண்டு, தங்களின் பொருத்தமற்ற குறுகிய எண்ணங்களை விட்டுவிடவேண்டும். இதன் மூலம் தான் உள்ளூர், வெளியூர் ஊழியர்கள் 'அவர்கள்' 'நாம்' என்ற வேறுபாடற்று ஒன்றாக இணைவார்கள். அதன் மூலம் சந்தர்ப்பவாத போக்குகளை தவிர்ப்பார்கள்.

இராணுவ வேலையிலும் ஸ்தல வேலையிலும் ஈடுபடும் ஊழியர்கள் உறவு குறித்தும் இது பொருந்தும். அவர்கள் முழுவதுமாக இணைந்து சந்தர்ப்பவாத போக்குகளை களைய வேண்டும். இராணுவ ஊழியர்கள், ஸ்தல ஊழியர்களுக்கும், ஸ்தல ஊழியர்கள், இராணுவ ஊழியர்களுக்கும் உதவ வேண்டும். இவர்களுக்கிடையில் பிளவு ஏற்பட்டால் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்காக விட்டுக் கொடுத்து அவசியமான சுயவிமர்சனத்தை வெளிக்கொணர வேண்டும். பொதுவாக சொல்லப் போனால் இராணுவ ஊழியர்கள் பொறுப்பில் உள்ள பகுதிகளில் உள்ளூர் ஊழியர்களுடன் உள்ள உறவு சரியில்லையென்றால் அவர்கள் தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும். இராணுவ ஊழியர்கள் தங்கள் சொந்த பொறுப்பினை உணர்ந்து உள்ளூர் ஊழியர்களுடனான உறவில் பணிவினை மேற்கொண்டு நமது இராணுவ முயற்சிகளுக்கும் ஸ்தல பிரதேசங்களில் நடைபெறும் நிர்மாணப் பணிகளுக்கும் ஓர் இசைவான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

வேறுபட்ட இராணுவ பிரிவுகள், இடங்கள் துறைகள், ஆகியவற்றுக்கும் இதுவே பொருந்தும். மற்றவர்களை ஒதுக்கி தன் சொந்த வேலைகளை மட்டுமே கவனிக்கும் சுயநல பிரிவுவாத போக்கினை நாம் எதிர்க்க வேண்டும். மற்றவர்களின் துன்பங்களுக்கு அலட்சியம் காட்டுவது, மற்ற பிரிவுகளுக்கு வேண்டுகோளின் பேரில் ஊழியர்களை அனுப்ப மறுப்பது அல்லது தகுதி குறைவானவர்களை மட்டுமே அனுப்புவது, ''அடுத்தவர் நிலத்தில் தான் மலம் கழிப்பது,'' மற்ற துறைகளுக்கும் மற்ற பகுதிகளுக்கும் மற்ற மனிதர்களுக்கும் இம்மியளவும் கூட கவனம்தராமல் இருப்பது,

படிப்பகம்

www.padippakam.com



இப்படிப்பட்டவர்கள் பொதுவுடமை உணர்வு முழுவதும் இழந்த சுயநலப் பிரிவுவாதிகளாவர். முழுமைபற்றிக் கருதாமல் இருப்பது, பிற துறைகளுக்கும் பிற பகுதிகளுக்கும் பிற மனிதர்களுக்கும் சிறிதளவு கூட கவனம் செலுத்தாமல் இருப்பது இவை தான் சுயநலப் பிரிவுவாதிகளின் குணம்சங்களாகும். முழுமையை கவனிக்காதது மற்ற பிரிவுகளுக்கு இடங்களுக்கு மற்றும் மக்களுக்கு முழு அலட்சியம் காட்டுவது என்பது சுயநலவாதத்தின் குணம்சங்களாகும். இம்மாதிரியான நபர்கள் கற்றுக் கொள்ள நாம் நம் முயற்சிகளை அதிகப்படுத்த வேண்டும். சுயநலப்பிரிவுவாதம் என்பது சந்தர்ப்பவாதப் போக்கு. இதுவளர்ந்தால் அபாயகரமானதாகிவிடும் என்பதை அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

பழைய, புதிய தோழர்களுக்கிடையிலான உறவுநிலை அடுத்த பிரச்சனை. எதிர்ப்பு யுத்தத்தின் ஆரப்பத்திலிருந்து நமது கட்சி பெரிய அளவிற்கு வளர்ந்துள்ளது. அதிக அளவில் புதிய தோழர்கள் உருவாகியுள்ளனர். இது ஒரு நல்ல அம்சம். சோவியத் பொதுவுடமைக் கட்சியின் 8 வது காங்கிரஸின் போது ஸ்டாலின் கூறினர் ''எப்பொழுதுமே பழைய தோழர்கள் போதுமான அளவு இருக்க முடியாது. தேவையான அளவிற்கும் மிகக் குறைவாகத்தான் இருக்கிறார்கள். இயற்கை விதிகளின் செயல் பாட்டிற்கேற்ப அவர்களின் ஒரு பகுதியினர் மறைந்து வருகின்றனர்.'' இங்கு இயற்கை விதிகளை மட்டுமல்ல, ஊழியர்களின் நிலையையும் விவாதிக்கிறார். பழைய ஊழியர்களுடன் இணைந்து ஒற்றுமையுடன் வேலைசெய்யக் கூடிய பெருமளவு புதிய ஊழியர்கள் இல்லாதிருந்தால், நமது இலட்சியமே நின்றுவிடும். ஆகவே அனைத்து பழைய ஊழியர்களும் முழு உற்சாகத்தோடு புதிய தோழர்களை வரவேற்று, இதமான ஈடுபாட்டினைக் காண்பிக்க வேண்டும். புதிய தோழர்களிடம் குறைகள் இருப்பது உண்மைதான். அவர்கள் புரட்சியில் நீண்ட நாட்கள் ஈடுபட்டது இல்லை. அனுபவம் குறைவாகத்தான் பெற்றிருப்பார்கள். சிலர் தவிர்க்கவியலாதபடி பழைய சமூகத்தின் ஆரோக்கிய மற்ற தத்துவத்தின் மிச்ச சொச்சங்களை கொண்டிருப்பர். ஆனால் இந்தக் குறைபாடுகள் படிப்படியாகக் (கட்சி) கல்வியின் மூலம் புரட்சியில் ஈடுபடுவதன் மூலம் நீக்கப்பட வேண்டும். ஸ்டாலின் சொன்னது போல் புதிய தோழர்களின் சத்தான அம்சம் அவர்கள் புதியதைக் கூர்மையாகக் கவனிப்பது. ஆகவே சுறுசுறுப்பும், உயர்ந்த அளவிற்கு உற்சாகமும் - இந்த அம்சம் பழைய தோழர்களிடம் குறைவாக உள்ளது- கொண்டிருப்பார்கள். பழைய, புதிய

படிப்பகம்

www.padippakam.com



தோழர்கள் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும். ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களின் நல்ல அம்சங் களிலிருந்து கற்றுக் கொண்டு தங்கள் குறைகளை கடந்து வரவேண்டும். பொது இலட்சியத்தில் ஒன்ருக இணைந்து சந்தர்ப்பவாத போக்கிற்கு எதிராக கவனிப்போடு இருக்க வேண்டும் பொதுவாகச் சொல்வதாளுல் பழைய தோழர்கள் பொறுப்பில் உள்ள பகுதிகளில், புதிய தோழர்களுடன் உள்ள உறவு நல்ல நிலையில் இல்லையென்ருல் அதற்கு பழைய தோழர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

பகுதிக்கும், முழுமைக்கும் இடையிலான உறவு தனிநபருக்கும் கட்சிக்கும் இடையிலான உறவு, இராணுவ ஊழியர்களுக்கும் ஸ்தல வேலை செய்யும் ஊழியர்களுக்கும் இடையிலான உறவு, இருபகுதி களுக்கிடையிலான உறவு, இரு துறைகளுக்கிடையிலான உறவு, பழைய புதிய தோழர்களுக்கிடையிலான உறவு, ஆக இவை அனைத்துமே கட்சிக்குள் உள்ள உறவுகளாகும். இந்த எல்லா வகை உறவுகளிலும், பொதுவுடமை உணர்வை அதிகப்படுத்து வதும், சந்தர்ப்பவாத போக்கிற்கெதிராக கவனத்தோடு இருப்பதும் அவசியம். இதன் மூலம்தான் நமது கட்சி நல்லநிலையில் இருப் பதோடு, நல்ல முறையில் போரிடவும் முடியும். இது ஒரு முக்கிய மான பிரச்சனை. கட்சியின் வேலைமுறையினை சீர்படுத்துவதன் மூலம் இதைத்தீர்க்கவேண்டும். ஸ்தாபன உறவுகளில் வெளிப்படும் அகவயவாதந்தான் குறுங்குழுவாதம் எனப்படும். நாம் அகவய வாதத்தினை தூக்கியெறிந்து யதார்த்தங்களிலிருந்து உண்மையைத் தேடும் மார்க்சிய லெனினிய உணர்வை நிலை நாட்டவேண்டு மாளுல், சந்தர்ப்பவாத மிச்ச சொச்சங்களை கட்சியிலிருந்து துடைத் தெறியவேண்டும். கட்சியின் நலன்கள், தனிநபர் அல்லது குழு நலன்களுக்கு மேலானது என்ற கொள்கையிலிருந்து தொடங்க வேண்டும். இதன்மூலம் தான் கட்சி, முழு இணைவையும், ஒற்று மையும் பெறுவது சாத்தியம்.

கட்சியின் உள் வெளி உறவுகளிலிருந்து சந்தர்ப்பவாதத்தின் மிச்ச சொச்சங்களை நீக்கிவிடவேண்டும். இதற்கான காரணம் கட்சிமுழுவதிலுமுள்ள ஊழியர்களை மட்டுமே ஒன்றுபடுத்துவதன் மூலம் எதிரியை வீழ்த்திவிடமுடியாது. நாடு முழுவதும் உள்ள மக்களை ஒன்றுபடுத்துவதன் மூலம்தான் எதிரியை வீழ்த்த முடியும். இருபது வருடங்களாக மக்கள் அனைவரையும் இணைக்கும் இலட்சியத்தில், பெரிய கடினமான வேலையை சீனப்பொதுவுடமைக்

படிப்பகம்

www.padippakam.com



கட்சி செய்துள்ளது. எதிர்ப்புயுத்தம் வெடித்ததிலிருந்து, கடந்த காலத்தைக் காட்டிலும் இந்த வேலையில் பெரிய அளவிற்கு வெற்றி பெற்றுள்ளோம்.

இதன் பொருள் அனைத்து தோழர்களும், மக்களை அணுகுவதில் சரியான முறைகளைக் கையாளுகிறார்கள், சந்தர்ப்பவாதப் போக்கி லிருந்து மீண்டுவிட்டார்கள் என்பதல்ல. உண்மையில் சந்தர்ப்ப வாத போக்கு இன்னும் கட்சியில் அதிகமான ஊழியர்களிடம் நிலவுகிறது. சில சமயங்களில் அபாயகரமான அளவிற்குக்கூட. பெரும்பாலான நமது தோழர்கள் கட்சி சாராத மக்கள் மீது கர்வப் போக்கு உடையவர்களாக. இகழ்ச்சியாக அவர்களை பார்ப்பவர் களாக, அவர்களை வெறுக்கவோ, அல்லது மறுக்கவோ அல்லது அவர்களின் நல்ல அம்சங்களை கவனிக்காமல் வெறுக்கவோ, ஒதுக் கவோ செய்கிறார்கள். இது உண்மையில் குறுங்குழுவாத போக்கு ஆகும். சில மார்க்சிய புத்தகங்கள் படித்தபின்னால், அடக்கத்திற்கு மாறாக அகந்தையுள்ளவர்களாக மாறுகின்றனர். தங்கள் அறிவு அரைகுறையானது, என்ற உண்மையை உணராமல் மற்றவர்களை பயனற்றவர்கள் என்று ஒதுக்கி விடுகின்றனர். எந்த சமயத்திலும் கட்சி சாராத மக்களிடம் ஒப்பிடும் போது நாம் சிறுபான்மையினர் தான் என்ற உண்மையை நாம் உணரவேண்டும். ஒவ்வொரு நூறு நபருக்கு ஒரு பொதுவுடமைவாதி வீதம் இருந்தால் 45 கோடி மக்களுக்கு, 45 லட்சம் பொதுவுடமைவாதிகள் இருக்கவேண்டும். இவ்வளவு பெரிய எண்ணிக்கையை நமது கட்சி அடைந்தாலும் கூட மக்கள் தொகையில் நாம் ஒரு சதவீதம் தான் இருப்போம் கட்சிசாராத மக்கள் 99 சதவீதம் இருப்பார்கள். கட்சி சாராத மக்களிடம் நாம் இணையாமல் இருப்பதற்கு காரணமென்ன? நம்முடன் இணைய விரும்புகிறவர்கள் அல்லது இணையப்போகிறவர் களை பொறுத்தமட்டில் நமது ஒரே வேலை அவர்களோடு ஒத் துழைப்பது தான். அவர்களை புறக்கணிப்பதற்கு எந்த ஒரு உரிமையும் இல்லை. ஆனால் சில தோழர்கள் இதைப் புரிந்து கொள்ளாமல் நம்முடன் ஒத்துழைப்பவர்களை இகழ்ச்சியாகப் பார்க்கிறார்கள் அல்லது அவர்களை புறக்கணிக்கிறார்கள். இம்மாதிரி செயல்படுவதற்கு எந்த நியாயமும் இல்லை. மார்க்ஸ், எங்கெல்ஸ் லெனின், ஸ்டாலின் ஆகியோர் ஏதாவது நியாயங்களை கொடுத் துள்ளனரா? இல்லை. மாறாக, அவர்கள் மக்களுடன் இணைவதற்கு நம்மை ஊக்கப்படுத்தியுள்ளனர். மக்களிடமிருந்து நாம் விலகு வதை அல்ல. சீனப்பொதுவுடமைக் கட்சியின் மத்திய கமிட்டி

படிப்பகம்

www.padippakam.com



ஏதாவது நியாயங்களை தந்துள்ளதா? இல்லை. அதன் எல்லாத்தீர்மானங்களிலும் மக்களிடமிருந்து நம்மை விலக்கி தனிமைப்படுததும் எந்த ஒரு தீர்மான வாசகமும் இல்லை. அதற்கு மாருக மக்களுடன் நெருங்கிய உறவுகொள்ளும்படி கேட்டுக்கொண்டுள்ளது, மக்களிடமிருந்து நாம் பிரிவதை அல்ல. மக்களிடமிருந்து நம்மை பிரிக்கும் எந்த ஒரு செயலுக்கும் எந்த நியாயமும் இல்லை. சில தோழர்களின் திட்டமிட்ட குறுங்குழுவாத சிந்தனையின் விளைவு தான் இது. இம் மாதிரியான குறுங்குழுவாதப்போக்கு நம் தோழர்களில் சிலரிடையே அதிக அளவு உள்ளது. அது நம் கட்சி வழியை தடுத்து வருகிறது இந்த பிரச்சனையை எதிர்கொள்ள நாம் பரந்த அளவிற்கு கட்சிக் கல்வியை எடுத்துச்செல்ல வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் பிரச்சனையின் தீவிரத்தை—கட்சிசாராத மக்களுடனும், ஊழியர்களுடனும், இணையாமல் நாம் எதிரியை வெல்வதோ புரட்சியின் இலட்சியத்தை அடைவதோ சாத்யமில்லை—என்பதை உண்மையோடு நமது கட்சி ஊழியர்களுக்கு உணர்த்த வேண்டும்.

எல்லா குறுங்குழுவாதப் போக்குகளும் அகவயதாதமே புரட்சியின் உண்மையான தேவைகளுடன் பொருந்தாத ஒன்று. ஆகவே அகவாயவாதத்திற்கும் குறுங்குழுவாதத்திற்கும் எதிராக ஒரே சமயத்தில் போர் தொடுக்க வேண்டும். இன்று கட்சியின் பகட்டு எழுத்து நடை குறித்து பேச நேரமில்லை. இதனை அடுத்த கூட்டத்தில் விவாதிக்கிறேன். கட்சியின் பகட்டான எழுத்து நடை, குறுங்குழுவாத, அகயவாதத்தின் வெளிப்பாடும் ஆகும். பகட்டான எழுத்து நடை பயனற்ற குப்பைகளைத்தான் சேர்க்கும். இது மக்களுக்கும் புரட்சிக்கும் சேதம் இழைக்கும் இதை நாம் முற்ருக ஒழிக்க வேண்டும்.

அகவயவாதத்தை எதிர்க்க பொருள் முதல் வாதத்தையும் இயங்கியலையும் பிரச்சாரம் செய்ய வேண்டும். எப்படியிருந்தபோதிலும் இயங்கியல் பிரச்சாரத்திற்கோ, பொருள் முதல்வாத பிரச்சாரத்திற்கோ, பெரும்பாலான நமது கட்சித் தோழர்கள் அழுத்தம் தருவதில்லை. சிலர் அகயவாதப் பிரச்சாரத்தினை சகித்துக்கொள்வதோடு அதனுடன் ஒத்தும் போகின்றனர். மார்க்சியத்தில் நம்பிக்கையிருப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். ஆனல் பொருள் முதல்வாதத்தைப் பரப்ப எந்த முயற்சியும் எடுத்துக் கொள்வதில்லை. அகவயவாத விஷயங்களை படிக்கும் போதோ, அல்லது கேட்கும்போதோ அதைப்பற்றி கவலைப்படுவதில்லை. இது பொதுவுடமைவாதிகளின் நடைமுறையல்ல. இப்போக்கு பெரும்

www.padippakam.com



பாலான நம் தோழர்களை நச்சுப்படுத்தி அவர்களின் உய்த்துணரும் சக்தியை அழித்து விடுகிறது. ஆகவே நாம் கட்சியில், அகவய வாதம் மற்றும் குறுங்குழு வாதத்தின் பிடியிலிருந்து நமது தோழர் களின் சிந்தனையை விடுவிக்க ஒரு அறிவூட்டும் இயக்கத்தை தொடங்கவேண்டும். அகவயவாதம், குறுங்குழுவாதம், பகட்டான எழுத்து நடை ஆகிய இவற்றை கைவிட அவர்களுக்கு நாம் அறை கூவல் விட வேண்டும். ஜப்பானிய பொருள்களைப் போலவே இந்தக் கேடுகள் நம்மிடம் நீடிக்கவும் அவற்றுக்கு நாம் அடிபணிந் திருப்பதையுமே, நம் எதிரி விரும்புகிறுன். ஆகவே நாம் ஜப்பானிய பொருட்களை ஒதுக்குவது போலவே இவற்றையும் எதிர்த்து ஒதுக்கு மாறு அறிவுரை கூற வேண்டும். நாம் அகவயவாதம், குறுங்குழு வாதம், பகட்டான எழுத்து நடை ஆகிய இந்தப் பொருட்களை மறுத்து ஒதுக்க வேண்டும். இவைகளின் விற்பனைக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டும். நமது கட்சியின் கீழான தத்துவ நிலையை கணக்கிட்டு இப்பொருள்களை வாணிபம் செய்பவர்களை நாம் அனு மதிக்கக் கூடாது. இந்த நோக்கத்திற்காக தோழர்கள் தங்கள் பிரித்துணரும் சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்கும், அல்லது நிராகரிப்பதற்கும் முன்பும் ஒவ் வொரு பொருளையும் ஆய்ந்தறிந்து நல்லதை, கெட்டதிலிருந்து பிரித்தறிய வேண்டும். பொதுவுடைமைவாதிகள் எப்பொழுதும் தங்கள் சொந்த மூளையை பயன்படுத்தி ஒரு பொருள் எங்கிருந்து வருகிறது. ஏன் வருகிறது, என்பதை ஆராய வேண்டும். நல்ல நிலையில்உள்ளதா? உண்மைக்குப் பொருந்தி வருகிறதா? இல்லையா என்பதில் கவனம் செலுத்த வேண்டும். எந்தச் சமயத்திலும் குருட்டுத்தனமாகப் பின் தொடரவோ, அடிமைத்தனத்தை வளர்த்தவோ கூடாது.

இறுதியாக அகயவாதம், குறுங்குழுவாதம், பகட்டான எழுத்து நடை ஆகிய இவற்றை எதிர்க்கும்போது இரண்டு நோக்கங்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். முதலில் எதிர்கால தவறுகளைத் தவிர்க்க கடந்த கால தவறுகளிலிருந்து பாடங்களை கற்க வேண்டும். இரண்டாவது நோயாளியைக் காப்பாற்ற நோயைக் குணப்படுத்த வேண்டும். எந்த ஒருவரின் உணர்வுகளுக்கும் தாட்சண்யம் காட் டாமல் கடந்த காலத் தவறுகளை அம்பலப்படுத்த வேண்டும். எதிர் கால வேலைகளை மிகவும் கவனத்தோடும், நல்ல முறையிலும் செய்ய கடந்த காலத்தின் தவறுகளை விஞ்ஞான ரீதியில் பரிசீலிப்பதும்,

படிப்பகம்

www.padippakam.com



விமர்சிப்பதும் அவசியம் எதிர்காலத் தவறுகளை தவிர்க்க, கடந்த கால தவறுகளிலிருந்து பாடம் கற்போம் என்பதன் பொருள் இது தான். நாம் தவறுகளை அம்பலப்படுத்துவதும், விமர்சிப்பதும், மருத்துவர் நோயைக் குணப்படுத்துவது போல முழுக்கவும் ''நோயாளியைக் காப்பாற்றுவதற்கே! அவன் இறப்பதற்கு அல்ல.'' ஒரு குடல் புண்ணுடைய நபர் அப்புண்ணை அறுவை சிகிச்சை மூலம் நீக்கிவிட்டால் பிழைத்துவிடுவார். ஒரு மனிதன் சிகிக்சைக்கு பயந்து தன் நோயை மறைக்க முடியாது. அந்நோய் முற்றுவதற்குள், நேர்மையோடும், உண்மையோடும் தன்னை குணப்படுத்த முன் வந்தால் அவரை நாம் வரவேற்று குணப்படுத்த வேண்டும். அதேபோல் தன் தவறுகளை தொடர்ந்து நீடிக்கும் ஒரு மனிதன் அத் தவறுகள் ஓர் எல்லையை மீறுவதற்குள், நேர்மையோடும், உண்மையோடும் தன்னை சரிசெய்து கொள்ள முன்வந்தால் அவரை நாம் வரவேற்று ஒழுங்குபடுத்த வேண்டும் இதன் மூலம் அவர் ஒரு நல்ல தோழராக உருவாவார். அவர் பேரில் கடுமையாக நடந்து கொள்வதால் நாம் வெற்றி கொள்ள முடியாது. தத்துவ அல்லது அரசியல் நோயை குணப்படுத்துவதில் கரடுமுரடாகவோ, மூர்க்கத்தனமாகவோ இருக்கக்கூடாது. நோயாளி பிழைக்க, நோயைக்குணப்படுத்த வேண்டும் என்ற வழிமுறையைக் கையாள வேண்டும். இதுதான் சரியான பலன் தரக்கூடிய முறை,

கட்சிப் பள்ளியைத் தொடங்கி வைக்கும் இச்சமயத்தில் விரிவான உரையாற்றியுள்ளேன். நான் பேசியதை தோழர்கள் சிந்திப்பார்கள் என நம்புகிறேன்.

பிப்ரவரி 1 1942 தோழர் மாசேதுங்.

மாசேதுங்கின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் (பக்கம் 580, 594) கல்கத்தா வெளியீடு.

படிப்பகம்

www.padippakam.com

# உட்கட்சி விமர்சனம்

............உட்கட்சி விமர்சனம் சம்பந்தமாக ஒரு விசயத்தை குறிப்பிட வேண்டும். சில தோழர்கள் தங்கள் விமர்சனத்தில் முக்கிய பிரச்சனைகளைத் தவிர்த்து, சிறிய விசயங்களில் மாத்திரம் தங்கள் கவனத்தை செலுத்துகின்றனர். விமர்சனத்தின் பிரதான கடமை அரசியல், ஸ்தாபன பிழைகளை சுட்டிக்காட்டுவதே, என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தனிநபர் குறைபாடுகளைப் பொறுத்த அளவில் அவை அரசியல், ஸ்தாபனரீதியான பிழை களுடன் தொடர்புடையவையாய் இருந்தால் ஒழிய, கூடுதலான விமர்சனம் செய்வது அனுவசியமாகும். இப்படி செய்தால் சம்பந் தப்பட்ட தோழர்கள் யாது செய்வது என்று அறியாமல் திக்கு முக்காடுவர். இன்னும் இத்தகைய விமர்சனம் வளர்ந்தால் கட்சிக் குள் சிறிய தவறுகளில் முக்கிய கவனம் செலுத்தப்படும். பின் ஒவ்வொருவரும் அச்சத்திற்குள்ளாகி, மிதமிஞ்சிய எச்சரிக்கை கொண்டு, கட்சி அரசியல் கடமைகளை மறந்துவிடுவர் இது மிகப்பெரிய அபாயமாகும்.

உட்கட்சிவிமர்சனந்தில், அகவயவாதம், தன்னிச்சைப்போக்கு கொச்சையான விமர்சனம் ஆகியவற்றிற்கெதிராக எச்சரிக்கை இருக்கவேண்டும். அறிக்கைகள் எப்போதும் சான்றுகளை அடிப்படை யாகக் கொள்ளவேண்டும். விமர்சனம் அரசியல் அபசத்தை வலியுறுத்த வேண்டும்.

நாம் குருட்டுத்தனமாகவும் விமர்சனப்பார்வை அற்றும் அணு கினல் நிறைய விஷயங்கள் சுமையாகவும், தடையாகவும் மாறி விடலாம். சிலவற்றை உதாரணங்களாக பார்க்கலாம். தவறுகள் செய்வதன் மூலம் நீங்கள் அதற்காக வருத்தப்பட்டு சோர்வடைவீர் கள். நீங்கள் தவறிழைக்கவில்லை ஆயின், தவறுகளிலிருந்து விடு பட்டவராக உங்களை நினைத்து, அகந்தை அடைவீர்கள். வேலையில் ஏற்படும் தோல்வி அவநம்பிக்கையை, சோர்வை வளர்த்தும் வேலை யில் ஏற்படும் வெற்றியோ அகந்தையையும், தலைகனத்தையும் வளர்க்கும்,

குறுகியகால போராட்ட சாதனை கொண்ட தோழர் அதனைக் காட்டி தன் பொறுப்பினை தவிர்ப்பார். அனுபவம் வாய்ந்த தோழர்

படிப்பகம்

www.padippakam.com



தன் நீண்டகால சாதனையை காட்டி அறிவுரையாளராக மாறிவிடுவார். தொழிலாளிகளும், விவசாயிகளும் தங்கள் வர்க்க அடிப்படையில் அகந்தை கொண்டு, அறிவாளிகளை தாழ்வாக பார்ப்பார்கள். அறிவாளிகளோ தாங்கள் கொஞ்சம் அறிந்து கொண்டதனால் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தாழ்வாகப் பார்ப்பார்கள்.

ஒரு தோழரின் தேர்ச்சியான திறமை ஆதாயத்திற்கு பயன்படுத்தப்படலாம். அது தலைகனத்திற்கு காரணமாகி மற்றவர்களிடம் வெறுப்பை ஏற்படுத்தும். ஒருவரின் வயது கூட கர்வத்திற்கு காரணமாக அமையலாம். இளையவர்கள் தங்கள் உற்சாகத்தாலும் திறமையினாலும் வயதானவர்களை தாழ்வாக பார்ப்பார்கள். வயதானவர்கள் தாங்கள் வளமான அனுபவம்கொண்டதனால், இளையவர்களை தாழ்வாகப் பார்ப்பார்கள். விழிப்புணர்வு இல்லையெனில், இம்மாதிரியான விஷயங்கள் சுமையாகவோ தடையாகவோ மாறலாம்.

ஒரு சுமையைப் போல கடினமான வேலை நம் முன்னே, நமக்கு சவாலாக உள்ளது. சில சுமைகள் பளு அதிகமானவை. சில பளு குறைவானவை. சில நபர்கள் குறைவான பளுவை தாங்கள் எடுத்துக் கொண்டு. மற்றவர்கள் மீது அதிகமான பளுவை திணிக்கிறார்கள். இது ஒரு முறையான செயல் அல்ல. சில தோழர்கள் வித்தியாசமானவர்கள். இவர்கள் தங்களிடம் அதிகமான பளுவை வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு குறைவான, சுலபமான பளுவை கொடுக்கின்றனர். இவர்கள் துன்பத்தை தாங்குவதில் முதலிலும் வசதியை அனுபவிப்பதில் கடைசியிலும் உள்ளனர். இவர்கள் நல்ல தோழர்கள். இவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

*மாசேதுங்*

(நன்றி: வேன்கார்ட்)

படிப்பகம்

www.padippakam.com

ஜூலை—1986

தொடர்பு கொள்ளவும் :

விலை ரூ. 1—50

பெ. சிவஞானம்

9, மாரியம்மன் கோவில் வீதி
சௌரிபாளையம்
கோவை-641 028

படிப்பகம்